# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2134 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

சட்ட அலுவலர் (நிர்வாக சேவை வகுதியின் - பிரிவு III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத் துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் நிர்வாக சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கான 01 வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்க்கும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி இவ்வெற்றிடத்திற்கு நியமிக்கப்படுவார். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இல. 06 இன்கீழ் குறிப்பிட்ட) புள்ளிகள் வழங்கும் முறைகளுக்கமையவே நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **அவசியமான தகைமைகள் :**

(i) கல்வித் தகைமைகள்/தொழில் தகைமைகள்.- உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) அனுபவம்.

உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்பு வழக்கறிஞராக 3 வருடங்களுக்குக் குறைவில்லாத தொடர்ச்சியான செயல் அனுபவம் பெற்றிருத்தல். (தொடர்ச்சியான தொழில் அனுபவத்தை நிரூபிப்பதற்காக முன்வைக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்ற காலம், திகதி, உத்தியோகபூர்வ முத்திரை போன்றவை தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின்போது முன்வைத்தல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்ததன் பின்பு அரச நிறுவனமொன்றில் சட்டப்பிரிவில் 3 வருடங்களுக்குக் குறையாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களுக்கான அனுபவத்தை பெற்றிருத்தல்.

(1) வழக்கு சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பாடல் நடவடிக்கைகள் செய்திருத்தல்.
(2) ஒப்பந்தங்கள் மற்றும் தொடர்புபட்ட சட்ட நடவடிக்கைகள்.
(3) பொருத்தமான கட்டளைச்சட்டங்கள் தொடர்பான சட்டநடவடிக்கைகள்.
(4) சட்டக் குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட பத்திரங்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள்.
(5) வெவ்வேறு நிறுவனங்களினால் நடத்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு உரிய விசாரணைகள் தொடர்பான நடவடிக்கைகள்.
(இவ் விடயங்கள் செயலாளர், திணைக்களத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

(iii) உடற் தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) ஏனையவை :
* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது. தங்களுக்கான ஓய்வூதிய முறை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படவேண்டும். நீங்கள் விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் கட்டளைக்கு அமைவாக அதற்கான பங்களிப்பு பணம் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று வருட தகுதி காண் கால எல்லைக்குட்பட்டது. பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று வருடத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைக்கு இணங்க சேவைக்கு இணைந்து 05 வருட காலத்தினுள் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருப்பதுடன், அரச கரும மொழியல்லாத மொழி மூலமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் கால எல்லைக்குள் அரச கரும மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொது சட்ட விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப் பிரமாணம் மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கு அமைய இந்நியமனம் மேற்கொள்ளப்படும்.

4. **வயது எல்லை**.- விண்ணப்பதாரி விண்ணப்பம் முடிவடையும் இறுதித் தினத்தன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவீடு**.- இப்பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பளம், 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் SL-1-2016 இன் படி ரூபா 47,615-10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895 (மாதாந்தம்) ஆகும். உங்களது சம்பளமானது அச்சுற்றறிக்கையின் விதிகளின் உப பிரிவு II இன்படி வழங்கப்படும்.

6. நேர்முகப் பரீட்சையின் போது பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| இல. | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித்தகைமை** | | 25 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொழில் தொடர்பான பட்டமொன்றினை பெற்றிருத்தல் | 25 | |
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற தொழில் தொடர்பான இளங்கலை டிப்ளோமா அல்லது சட்ட டிப்ளோமா (வருடமொன்றிற்கு குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் சம்பந்தமான பட்டமொன்றினை பெற்றிருத்தல் | | |
| | * முதலாம் வகுப்பு சித்திக்காக | 15 | |
| | * இரண்டாம் வகுப்பில் உயரிய சித்திக்காக | 10 | |
| | * மூன்றாம் வகுப்பில் கடைநிலை சித்திக்காக | 05 | |
| | சட்டக்கல்லூரியில் கடைசி ஆண்டில் முதலாம் வகுப்பில் சித்திக்காக | | |
| | சட்டக் கல்லூரியில் கடைசி ஆண்டில் இரண்டாம் வகுப்பில் சித்திக்காக | 10 | |
| | **குறிப்பு**: கௌரவ சித்தியுடன் கடைசி பரீட்சையில் சித்தியடைந்தால் மாத்திரம் 05 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். | 05 | |
| | (ஆகக் கூடியது ஒரு தகைமைக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்) | | |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

| இல. | விடயம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழில் அனுபவம்** | | 35 |
| | (i) ***மேலதிக தொழில் தகைமைகள்*** | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் பொருத்தமான பிரிவிற்கான ஓராண்டிற்கு மேற்பட்ட டிப்ளோமாவிற்காக (ஒரு டிப்ளோமாவிற்கு 10 புள்ளிகள் வீதம்) | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் பொருத்தமான பிரிவிற்கான 06 மாதத்திற்கு அதிகமான மற்றும் ஓராண்டிற்கு குறைந்த டிப்ளோமா கற்கைநெறிக்காக (ஒரு டிப்ளோமாவிற்கு 5 புள்ளிகள் வீதம்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் பொருத்தமான பிரிவிற்கான 03 மாதத்திற்கு அதிகமான மற்றும் 06 மாதத்திற்கு குறைந்த கற்கைநெறிச் சான்றிதழிற்காக (ஒரு கற்கைநெறிக்காக 03 புள்ளிகள் வீதம்) (இலக்கம் 1 இல் புள்ளிகள் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லாமல் ஏனையவை) | 25 | |
| | (ii) ***மேலதிக அனுபவம்*** | | |
| | அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் வழக்கறிஞராக அனுபவம் | | |
| | ஓராண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 25 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு அதிகமாகவும் ஓராண்டிற்கு குறைவுமாயின் 02 புள்ளிகள்<br>(ஆரம்ப தகைமைக்கு தேவையான 03 ஆண்டு வழக்கறிஞர் அனுபவத்திற்கு மேலதிகமாக) | | |
| | (20 வருடங்களுக்கு குறைவில்லாத சேவைக் காலத்தை கொண்டுள்ள வழக்கறிஞரிடம் அல்லது சனாதிபதி வழக்கறிஞரிடம் அல்லது நீதிபதியிடம் அல்லது பெறப்பட்ட சான்றிதழின் மூலம் மேலதிக அனுபவம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.) | | |
| | மேற்குறிப்பிட்ட தகைமைகள் பூரணப்படுத்திய அரசாங்க ஊழியர் அல்லது தனியார் நிறுவன ஊழியரிற்காக நிறுவனத்தின் தலைவரினால் மேலதிகத் தகைமை அத்தாட்சிப்படுத்தும்போது விண்ணப்பதாரி சட்டம் சம்பந்தமான பதவியில் தொழில் புரிந்ததை சேவை சான்றிதழ்/ சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். | | |
| 03 | **தகவல் தொழில்நுட்பவறிவு** | | 10 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பத்தினை பிரதான விடயமாக கற்றிருத்தல் | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 01 வருடத்திற்கு குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறிக்காக அல்லது 1500 மணித்தியாலங்களுக்காக | 07 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கற்கைநெறிச் சான்றிதழிற்காக<br>மாதம் 06/720 மணித்தியாலங்கள்<br>மாதம் 03/360 மணித்தியாலங்கள்<br>(ஆகக்கூடிய தகைமைகளுக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | 05<br>03 | |
| 04 | **மொழியறிவு** | | 15 |
| | ஆங்கில மொழி மூலம் முதுகலை பட்டம்/முதுகலை சட்டநெறி பட்டம்/சட்டநெறி பட்டம் (உரிய பரீட்சைகள் அனைத்திலும் ஆங்கில மொழி மூலம் பதிலளித்திருத்தல் வேண்டும்) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பில் கற்கைநெறிச் சான்றிதழ் (வருடம் 01 அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பில் கற்கைநெறிச் சான்றிதழ்<br>மாதம் 06/720 மணித்தியாலங்கள்<br>மாதம் 03/360 மணித்தியாலங்கள்<br>(ஆகக்கூடிய தகைமைகளுக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | 07<br>05 | |
| 05 | **நேர்முகப் பரீட்சையின் போதான நடத்தைகள்** | | 15 |
| | (i) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு | 05 | |
| | (ii) சட்டத்துறையில் நவீன போக்குகள் தொடர்பான அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்துக்களை முன்வைக்கும் திறமை மற்றும் ஆளுமை | 05 | |
| | மொத்த புள்ளிகள் | | 100 |

7. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- சகல விதங்களிலும் பூரணமாக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதியுடன் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக கீழ்வரும் அடையாளச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை**:

(i) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கம்பனிகள் பதிவாளர் நாயகம்,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர", இல. 400,
டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.

(ii) முன்வைக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவங்களை A4 கடதாசியில் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், 1.1 தொடக்கம் 5.1 வரையான விடையங்கள் முதலாம் பக்கத்திலும், 5.2 தொடக்கம் 7 வரையான விடையங்கள் இரண்டாம் பக்கத்திலும் 8 தொடக்கம் 9 வரையான விடையங்கள் மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு முறையாக தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும்.

(iii) அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" என குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/சமாதான நீதவான் ஒருவரினால்/சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவரினால்/ வக்கீல் ஒருவரினால்/விசேட நொத்தாரிசு ஒருவரினால்/முப்படையில் நிறைவேற்றுத் தரத்தில் பதவி வகிக்கும் அலுவலர் அல்லது ரூபா 47,615 ஐவிட அதிக மாதாந்த இணைந்த சம்பளத்தை பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை தாம் கடமைபுரியும் நிறுவனத் தலைவரினூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலிருந்து வேறுபட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பமொன்று காணாமல் போதல் அல்லது தாமதம் தொடர்பாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கருதும் பட்சத்தில் தங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அதே போல் நியமனத்தின் பின்னர் விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய நடவடிக்கைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. பதவி வெற்றிடங்கள் பூரணப்படுத்துவது அல்லது பூரணப்படுத்தாது விடுவது தொடர்பான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கே உண்டு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக,

செயலாளர்,
கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட
காலமாக இடம்பெயர்ந்த நபர்களின்
மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி
தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி
அமைச்சு.

2019, யூலை 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

**நிர்வாக சேவை வகுதியின் - பிரிவு III சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு**
**செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - 2019**

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................................................................

........................................................................................................................................

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

........................................................................................................................................

(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :........................................................................................

........................................................................................................................................

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..........................................................................................
..........................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :..........................................................................................
..........................................................................................................................................

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :....................................
.........................................................................................................................

3.0 3.1 ஆண்/ பெண் : பெண் - 1 ☐ ஆண் - 0 ☐

(கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்)

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2019.08.26 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 கல்வித் தகைமைகள் :

பட்டம் அல்லது உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டதற்கான கல்விச் சான்றிதழ் விபரம் மற்றும் வழங்கப்பட்ட திகதி :

(i) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(ii) பட்டம் அல்லது கல்விச்சான்றிதழின் பெயர் :----.
(iii) பட்டம் அல்லது கல்விச்சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.
(iv) வகுப்பு :----.

5.0 சட்டத்துறையில் பெற்றுள்ள அனுபவம் :----.

6.0 கணினித்துறையில் அனுபவம் :----.

7.0 ஏனைய கல்வித் தகைமைகள் அல்லது தொழிற்தகைமைகள் :----.

8.0 ஆங்கில மொழித்திறன் :----.

9.0 ஏதேனும் தவறொன்றுக்காக அல்லது பிரேரணைக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா? (உரிய கட்டத்தில் சரி அடையாளம் இடுக) (ஆம் எனில் விபரங்களைத் தருக.)

ஆம் ☐ இல்லை ☐
..........................................................................................................................................
..........................................................................................................................................

10.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதேனும் பகுதியொன்று பூரணப்படுத்தப்படாமை அல்லது/மற்றும் தவறாக பூரணப்படுத்தல் காரணமாக ஏற்படும் நட்டங்களை ஏற்றுக்கொள்வதற்கு சம்மதிக்கிறேன். அத்துடன் இங்கு அனைத்து விடயங்களையும் சரியாகப் பூரணப்படுத்தியுள்ளேன் என்பதையும் உறுதியளிக்கிறேன்.

(ஆ) என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயம் உண்மையற்றது என நிரூபிக்கப்பட்டால் தெரிவு செய்வதற்கு முன்னதாகவே தகைமையற்றவராக்கப்படுவேன் என்பதையும் பதவி வழங்கப்பட்டிருப்பின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) அத்துடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நிபந்தனைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என உறுதியளிக்கிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்ட எந்தவொரு விடயத்தையும் பிறகு மாற்றம் செய்யமாட்டேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவதுடன், அவர் என் முன்னிலையில் ..................................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதை அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----------
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரது பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)
திகதி :-----.

12.0 நிறுவனத் தலைவரின் சான்றிதழ் : (அரசாங்க/ மாகாண அரசாங்க/ அரசாங்க திணைக்கள சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................ இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ........................................ ஆக சேவை செய்வதுடன், அவரது விண்ணப்பப்படிவத்தை முன்மொழிந்து சமர்ப்பிக்கிறேன். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கு அவசியமான நடைமுறைகளை மேற்கொள்வேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்தும் அலுவலரது பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)
திகதி :-----.

07-956

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

*அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2013 (II) (2019)*

2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 5 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019, நவெம்பர் மாதம் நடத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பு வலுப்பெறுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமையும் நடைமுறைகளும், (2) அரசாங்க அலுவலகங்களில் பாவிக்கப்படும் கணக்கீட்டு முறைமைகள் என பெயர் குறிப்பிடப்படும் இப்பரீட்சையின் இரண்டு பாடங்களையுமோ அல்லது அவற்றில் ஒன்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து பாடத்தின் பாடத்திற்கு விலக்களிப்புப் பெறல் வேண்டும்.

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் தரம் II இற்கு உரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.

3. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன. போதிய அளவிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து விண்ணப்பதாரிகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகரம் மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/ நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு விண்ணப்பதாரிகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

5. **தகைமைகள்**.- அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையினைச் சித்தியெய்த வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் மற்றைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் அவ்வவ் நிறுவனங்களினால் வெளியிடப்படும். "ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும்". இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் உங்களுக்குரிய சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாது விடுவதனால் ஏற்படும் பெறுபேறு வெளயீடு தொடர்பான சிக்கல்களுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது)

6. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2019, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்) கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆளடையாள ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரியொருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

8. (i) **விண்ணப்பங்கள்**.- பந்தி இலக்கங்கள் 1.0 தொடக்கம் 6.0 வரை முதற் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் "A4" அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது பின்னிணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப்படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததா எனவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பம் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா எனவும், குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு, பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். சிங்களம் மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சைத் தலைப்பினை தயவுசெய்து ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும். மேலும், விண்ணப்பதாரி, பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

*தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.*- விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தகைமையை இரத்துச்செய்ய முடியும்.

(ii) முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 500 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டின் ஏதேனும் தபால்/உப தபால் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்துக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அநுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன், அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளைக்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொழும்புக்குப் புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கு அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது விண்ணப்பதாரி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதுதலாகாது.

10. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக் கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

12. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

13. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் உரிய சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரத்துக்கும் விடையளிக்க வேண்டும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

14. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 5 ஐப் பார்க்கவும்.)

15. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

16. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17. **பரீட்சைத் திட்டம்**.-விண்ணப்பதாரிகள் பின் குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்து மூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | புள்ளிகள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைமைகளும் பணிச்செயலொழுங்குகளும் | 100 | 02 மணித்தியாலங்கள் | 01 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைகள் | 100 | 02 மணித்தியாலங்கள் | 02 |
| | மொத்தம் : | 200 | | |

17.1 ***அலுவலக முறைமைகளும் பணிச்செயலொழுங்குகளும்***.- அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் தொடர்பான அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் என்பன பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள். காலம் : 30 நிமிடம் - 25 புள்ளிகள்.

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள். 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். காலம் : 90 நிமிடம் - 75 புள்ளிகள்.

17.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள், கணக்கீட்டு கட்டுப்பாட்டு ஏடுகள், அவை தொடர்பில் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள நிதி அறிவுறுத்தல்கள், கட்டளைகள் தொடர்பான அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் என்பன பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள். காலம் : 30 நிமிடம் - 25 புள்ளிகள்.

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள். 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். காலம் : 90 நிமிடம் - 75 புள்ளிகள்.

18. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

19. இப்பரீட்சை அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2019, யூலை 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013 (II) 2019**

Efficiency Bar Examination for Officers in Grade II of Public Management Assistants' Service – 2013 (II) 2019

(இப்பரீட்சை அறிவிப்பின்படி **இணைந்த சேவைகளில் உள்ள அரசாங்க முகாமைத்துவ** உதவியாளர் சேவையின் தரம் II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

உங்களுக்குரிய சேவை (இதைப் பூரணப்படுத்துவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் 5.0 பந்தியின் குறிப்பை நன்கு வாசிக்கவும்.)

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3.0 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தை குறிப்பிடவும். (பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.
(உதா. : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உதா. : (GUNAWARDHANA. H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0 சேவையாற்றும் இடமும் முகவரியும் :-
2.1 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனம் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3.0 பால் :-
பெண் – 1
ஆண் – 0 ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4.0 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 தொலைபேசி இலக்கம் : கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

அலுவலக ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 நீங்கள் தோற்ற உள்ள பாடம்/ பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |

7.0 தற்போது வகிக்கும் பதவி :
7.1 பதவி :----.

7.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

7.3 அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி :----.

8.0 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.

8.2 முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :----.

8.3 தபால்/ உப தபால் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகம் :----.

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

8.5 திகதி :----.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டி விடவும். (மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு .............................. முறையாகத் தோற்றுகின்றேன் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் ரூபா ............................. பரீட்சைக் கட்டணம் ......................தபால்/ உப தபால் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்துக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட ..................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

------,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி ...................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்ப மிட்டார் என்றும், அவர் முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

------,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனவென்றும்,
(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,
(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/ தோற்றவில்லை* என்றும்,
(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,
(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

07-954

---

**பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

*அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (I) 2019*

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான ஒரு வினைத்திறன்காண் தடைப்பரீட்சையானது 2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 8 மற்றும் 15 இன் ஏற்பாடுகள் (இடைக்கால ஏற்பாடுகள்) மற்றும் இணைப்பு 06 இற்கமைய 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. (i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ள மற்றும் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அத்துடன் 05 சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ள அலுவலர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ள ஆனால் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்திராத அத்துடன் 05 சம்பள ஏற்றங்களை ஈட்டியிராத அலுவலர்களுக்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் I இற்கு உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பு பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 05 வருட சலுகைக்காலம் ஒன்று வழங்கப்பட வேண்டும்.

3. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமான அளவில் இல்லாதிருத்தல் அல்லது வேறு காரணம் என்பவற்றின் காரணமாக நிலையம் ஒன்றினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் தனது தற்றுணிபின் பேரில் விண்ணப்பதாரிகளின் இரண்டாம் விருப்புரிமைக்கு இணங்க நிலையத்தினைத் தீர்மானிப்பதற்கும் உரிமை உள்ளது. சகல முன்மொழியப்பட்ட நகரங்களிலும் அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களைக் கொண்டிருப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திராவிடின் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சையினை நடாத்துவதற்கான ஒழுங்குகளை பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்வார். நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு இணங்க விண்ணப்பத்தின் உரிய பிரிவானது பூர்த்திசெய்யப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

4. (i) இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப் படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அவர்கள் உட்பட வேண்டும்.

5. **தகைமைகள்**.- அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுகின்றனர்.

**குறிப்பு**.- தரம் I இற்கு பதவியுயர்வு பெற்ற திகதியிலிருந்து 05 வருடத்திற்குள் இப்பரீட்சையினைச் சித்தியெய்தல் வேண்டும்.

இவ்வறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொருத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும். ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படுதல் வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் குறிப்பிடுதல் வேண்டும். **இணைந்த**

**சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும்**. அவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேற் பக்கத்தில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையம் குறிப்பிடப்படுதல் வேண்டும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாது விடுவதனால் ஏற்படும் பெறுபேறு வெளியீடு தொடர்பான சிக்கல்களுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது)

6.0 இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலில் பின்னிணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் மாதிரி விண்ணப்பத்துக்கு இணங்க தாமாகவே விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஒகத்து மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு முன்னளிக்கப்படும் விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்**. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய விபரங்கள் கொடுக்கப்பட்டிராத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7.0 **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துவதற்கு பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவர். இந்நோக்கத்திற்காக, பின்வரும் ஆவணங்களில் ஒன்றை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தத் தன்மையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு விண்ணப்பதாரி கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும். இவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அவர் உட்படுதல் வேண்டும்.

**போலியான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் போது மிகக் கவனமாகவும் சரியான தகவல்களைக் கொண்டும் நிரப்புதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்ய முடியும்.

8. (i) **விண்ணப்பங்கள்**.- பந்தியின் 1.0 முதல் 6.0 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கங்களிலும் தோன்றும் விதத்தில் "A4" அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சு செய்யப்பட்டதாக இருக்க முடியும். ஆனால் அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரியுடன் ஒத்திசைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்குக் கூடிய விண்ணப்பங்களை அல்லது நிழற்படப் பிரதிகளை (போட்டோப் பிரதிகள்) அனுப்பாதிருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. மாதிரியுடன் இணங்காத மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில், மாதிரிப் படிவத்தில் தோன்றும் பரீட்சைத் தலைப்பினை தமிழ், சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரியுடன் இணங்குகின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.

(ii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்த அமர்வுகளுக்கு முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒன்றுக்குக் கூடுதலான பாடங்களிற்கு ரூபா 500.00 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் ரூபா 250 உம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கப்படுவதற்கென நாடளாவிய ரீதியிலுள்ள ஏதேனுமோர் அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்தில் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். விண்ணப்பதாரி பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்வது உசிதமாகும். இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தினை இன்னொன்றின் சார்பில் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. (i) வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்துடன் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வயதெல்லையைக் கொண்டதும், விண்ணப்பமுடிவுத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன், அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்றினை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மேலேயுள்ள விபரங்களையும் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றினை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகலில் அனுப்புவது கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுக்கு பயனுள்ளதாக அமையும். அவ்வாறு பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்கும் போது ஏதேனும் தகவல்களை நிரூபிப்பதற்காக தன்வசம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் தபாலிலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பவற்றினை வைத்திருப்பது பயனளிக்கும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது பரீட்சார்த்தியானவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதலாகாது.

(ii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவரால் சான்றுபடுத்தியிருத்தல் வேண்டும்.

(iii) பரீட்சைக்காக தோற்றவுள்ள முதல் நாளிலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

10. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக அவர்களுக்கான கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதிக்க வேண்டும். எதுவித பிரயாணச் செலவினமும் செலுத்தப்படமாட்டாது.

11. எழுத்துப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும். குறித்த சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்குத் தாம் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்கலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்கள் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழிகளில் ஒன்றில் மூன்று வினாப் பத்திரங்களுக்கு விடையளிக்கலாம். விண்ணப்பத்தில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரீட்சையின் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்ற முடியாது.

12. அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறுவேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது 40% இனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 06 இனைப் பார்க்கவும்)

13. பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும் :

| பாடம் | புள்ளிகள் | காலம் | பாட இலக்கம் | வெட்டுப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| தாபனப் பணிகளும் செயலொழுங்கு விதிகளும் | 100 | 1 1/ 2 மணித்தியாலம் | 01 | 40 |
| அரச நிதி முகாமை | 100 | 1 1/ 2 மணித்தியாலம் | 02 | 40 |
| சமகாலப் போக்குகள் | 100 | 01 மணித்தியாலம் | 03 | 40 |

14.1 *தாபனப் பணிகளும் செயலொழுங்கு விதிகளும்*.- அலுவலக முறைமைகளின் அடிப்படைகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலமான தொடர்பாடல், ஆவணங்களைக் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களைத் தயாரித்தல் போன்ற துறைகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் பற்றிய அறிவு, அலுவலகச் செயற்பாடுகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவத் தேர்ச்சி என்பனவற்றை பரீட்சிப்பதற்கான பகுதி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள் I ஆம் தொகுதி, தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் தொகுதி II என்பவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் பகுதி என்பனவற்றை இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும்.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாளாகும். காலம் : 30 நிமிடங்கள் ஆகும். (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். காலம் : 60 நிமிடங்கள் ஆகும். (75 புள்ளிகள்).

14.2 *அரசாங்க நிதி முகாமை*.- அரசாங்க திணைக்களங்களிலும், அமைச்சுக்களிலும் பயன்பாட்டிலுள்ள நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்கள், வருமானங்களும் கொடுப்பனவுகளும், வரவு செலுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் ஆகிய விடயங்கள் (தொகை மதிப்பீடு, களஞ்சியப்படுத்தல், நிதி ஒழுங்குவிதிகள், கணக்காய்வு அடிப்படை அறிவு, வங்கி தொடர்பான அடிப்படை பரீட்சயம்) தொடர்பான அறிவும் விளக்கமும் இவ்வினாப் பத்திரத்தின் மூலம் பரீட்சிக்கப்படும்.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். காலம் : 30 நிமிடங்கள் ஆகும். (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். காலம் : 60 நிமிடங்கள் ஆகும். (75 புள்ளிகள்)

14.3 *சமகாலப் போக்குகள்*.- இவ்வினாப் பத்திரம், உள்நாட்டு மற்றும் சர்வதேச சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் பகுதியினையும், அலுவலக முகாமை தொடர்பான புதிய போக்குகள், அரசாங்க சேவையின் சேவை வழங்கல் தொடர்பான புதிய போக்கு மற்றும் நல்லாட்சி தொடர்பிலான அறிவினை பரீட்சித்தலுக்கான பகுதியினையும் இவ் வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையான வினாக்களை உள்ளடக்கும். (சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

15.0 இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

16.0 இப்பரீட்சை அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2019, யூலை 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (I) 2019**

Efficiency Bar Examination for Officers in Grade I of Public Management Assistants' Service – 2015 (I) 2019

(இப்பரீட்சை அறிவித்தலுக்கமைய இணைந்த சேவைக்குரிய அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க தகைமை பெறுகின்றனர்.)

தங்களுக்குரிய சேவை (இப் பிரிவினை நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5.0 இனது குறிப்பினைக் கவனமாகப் பார்க்கவும்.)

(வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 3.0 இற்கமைய தங்களின் விருப்பத்தேர்வுக்கு இணங்க தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நகரத்தினைக் குறிப்பிடவும்.) (இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

பரீட்சையின் மொழி ஊடகம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA. H. M. S. K.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0 சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி :-
2.1 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3.0 பால் :-
பெண் – 1
ஆண் – 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

4.0 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5.0 கையடக்க தொலைபேசி இலக்கம் :

6.0 நீங்கள் தோற்றும் பாடம்/ பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |
| | |

7.0 தற்போது வகிக்கும் பதவி :
7.1 பதவி :----.

7.2 நியமனக் கடித இலக்கம் :----.

7.3 அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இற்கான நியமனத் திகதி :----.

8.0 8.1 நீங்கள் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :----.

8.2 இல்லையெனின், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

8.3 அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகம் :----.

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

8.5 திகதி :----.

பற்றுச்சீட்டின் விளிம்புப் பகுதியினை கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை வைத்துக்கொள்வது உசிதமானது.)

9.0 **விண்ணப்பதாரியின் பிரகடனம் :**

மேலே தரப்பட்ட தகவல்கள் சரியானது என்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும் இப்பரீட்சைக்கு நான் முதற் தடவையாகத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்த வேண்டியதில்லை/ .............................. ஆம் திகதியில் ......................... அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்துக்கு ரூபா ..................... கொண்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை மேலே ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் மற்றும் பரீட்சைச் சட்டத்தின் சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அவரின் சார்பில் கையொப்பமிட குறித்தொதுக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தினைச் சான்றுறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் பணியாளரும் எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ...................................................................... என்பவர் ................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பத்தினை இட்டார் என்றும் அவர் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து அவர் விலக்குப் பெறுதல் உசிதமானது/பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

------,
சான்றுறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10.0 **திணைக்களத் தலைவரின் சான்றுரை**

நான் பின்வருவனவற்றைச் சான்றுப்படுத்துகின்றேன்,

(i) மேலே தரப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டது மற்றும் ;

(ii) அலுவலர் இணைந்த சேவைக்கு உரியவர் ;

(iii) அலுவலர் முன்னர் இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்*/ தோற்றியிருக்கவில்லை ;

(iv) அலுவலர் முன்னர் இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என்பதுடன் உரிய பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை அவர் ஒட்டியுள்ளார்;

(v) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகுதியுள்ளது.

* (பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

07-955

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## ஆய விற்பனையும் குத்தகையும்

### நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2020

2020, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2020, திசெம்பர் 31ஆந் திகதி வரையிலான காலத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2019, செத்தெம்பர் 06 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை நாரம்மல பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளு குத்தகை வாங்க முன் வருபவர் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திலோ பிரதேச செயலகத்திலோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழை காகித உறையிலிட்டு முத்திரை குத்தி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தான் விலைகோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது இப்பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும்போது உண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும் . அப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2019, செத்தெம்பர் 06 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை நாரம்மல பிரதேச செயலாளருக்கு உரியதாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அன்றைய தினம் பி. ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாகச் செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2020 ஆம் ஆண்டிற்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2020 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக

தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8. 2019. 09. 06 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2019.10.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எம்.பெத்தாவடு,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2019, யூலை 03.

அட்டவணை

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | தவறணை திறந்திருக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | நாரம்மல | 2019.09.06 மு. ப. 10.30 மணி | 1,000 | மு.ப.11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப.5.00 மணி தொடக்கம் பி.ப. 8.00 மணி வரை |

7-804

---

**வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத் தவறணைகள் குத்தகை விற்பனை**

**2020.01.01- 2020.12.31**

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளுத் தவறணை உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2020.01.01 தொடக்கம் 2020.12.31 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல், இக் காலப்பகுதியில் கள்ளுத் தவறணைகள் தனி நபருக்காக சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2019.08.19 ஆந் திகதி மு.ப.10.30 மணி வரை கேள்விப்பத்திரம் வலப்பனை பிரதேச செயலாளரால் ஏற்றுக்கோள்ளப்படும்.

2. (அ) இத்தீவின் எந்த பிரதேச செயலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்;

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும் ;

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும் போது, கள்ளுத் தவறணைகளின் குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும். ;

(ஈ) கேள்விப் பத்திரதும் நிரப்பும் போது கேள்விக்காரர் கீழ்க் காணும் முக்கியத்துவங்களை கருத்திற் கொள்ள வேண்டும்:-

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட்ட சாட்சியாளர்களின் கையொப்பத்துடன் தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும் ;

(iv) ஒவ்வொரு கேள்விதாரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப் பத்திரத்திற்காக வைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல்முலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு வலப்பனை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில், கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலவெல்லைக்குள் இடப்படல் வேண்டும். தபால் மூலம் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் குறித்த தினத்தில், இறுதி நேரத்துக்கு முன் கிடைக்கும்படி பதிவுத்தபாலில், "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலப்பனை," என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரம் பற்றிய விபரம் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் கேள்விதாரர்கள் வலப்பனை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனைத்தினத்தன்று பி.ப.2.00 மணிக்கு முன் வலப்பனை பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாக வலப்பனை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும் . மேற்படி வைப்புப்பணம், வலப்பனை இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான முத்திரைகள் கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரங்கள் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2019.09.18ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மீள விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது தொடர்பான இறுதியான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யூ. எம். ஆனந்த,
பிரதேச செயலாளர் ( பதில் கடமை),
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை.
2019, யூலை 04.

அட்டவணை

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப்பணம் ரூபா |
|---|---|---|---|---|
| இல. 05 பதியபெலெல்ல | வலப்பனை பிரிவிற்குள் | 2019. 08.19 | மு. ப. 10.30 | 5,000 |

7- 830

---

**குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகளுக்கான பங்குப் பிரிவுகள் விற்பனை - 2020**

2020, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2020, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள, கள்ளுத் தவறணைகளில் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்டுள்ள கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான பூரண வரப்பிரசாத விலைக்கு கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட கள்ளு விற்பனை செய்வதன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2019, புரட்டாதி மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலாளரினால் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கள்ளு பங்குப் பிரிவு விலைகளைக் கொள்வனவு செய்வதற்காக முன்வருவோர் உரிய கேள்விகோரல் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தை செலுத்தி எந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் உள்ள காசாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை தொடர்பான சான்றிதழ்களினையும் கடித உறையினுள் இட்டு அதனை முத்திரையிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தாம் கோரும் கள்ளுத் தவறணையின் இலக்கத்தினையும் பெயரினையும் தெளிவாக எழுதி அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கடைசி நேரத்துக்கு முன் கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இந்தப் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்வி கோரல் பெட்டியில் இடுவதன் மூலம் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்ய முடியும். குறித்த கேள்விகோரல் படிவங்களை சகல பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்கும் நபர்களினால் கேள்விகோரல் பத்திரம் பூர்த்தி செய்யப்படும் போது, கேள்விப்பத்திரங்களில் செய்யப்படும் எல்லா திருத்தங்களும் விண்ணப்பிக்கும் நபர்களின் பூரண கையொப்பம் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்வி கோரல் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2019, புரட்டாதி மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையிலாகும். விண்ணப்பிக்கும் எல்லா நபர்களும் இந்த தினத்தன்று, குறிப்பிட்ட நேரத்தில் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு வருகை தந்திருத்தல் வேண்டும்.

எவ்வித காரணமும் முன்னறிவித்தலும் செய்யாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ அல்லது கேள்விப்பத்திரங்களில் ஏதாவது ஒன்றையோ நிராகரிக்கும் உரிமை குருநாகல் பிரதேச செயலாளருக்கு உண்டு.

தனியான வரப்பிரசாதத்தை விலைக்குப் பெற்றுக்கொண்ட நபர் என அறிவிக்கப்பட்ட பின் சிறந்த கேள்விதாரர் என தெரிவு செய்யப்பட்டதும் அவர் குறித்த திகதி பி. ப. 2.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணை வைப்பாகச் செலுத்தி விற்பனை நிபந்தனைகளில் கையொப்பமிடல் வேண்டும்.

2020 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத் தவறணைகள் உள்ள இடங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு சான்று வழங்கப்பட மாட்டாது. தற்போது கள்ளுத் தவறணைகள் நடாத்திச்செல்லப்படும் கட்டிடம் 2020ஆம் வருடத்திற்காக கிடைக்காவிடின் அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிலையத்தின் தகுதி பற்றி கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 30 தினங்களுக்குள் வெற்றிபெற்ற கேள்வியாளரினால் அதற்காக குருநாகல் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

2019, புரட்டாதி மாதம் 04 ஆந் திகதி பங்குப் பிரிவுகளின் விரும்பத்தகுந்த கோரல்கள் இல்லாதிருப்பின் 2019.10.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விலை பங்குப் பிரிவுகள் குறித்த இடத்திலேயே நடாத்தப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் குருநாகல் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. எம். எம். எச். ஏகநாயக்க,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குருநாகல்,
2019, யூலை 04.

அட்டவணை

**குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகள் - 2020**

| இலக்கமும் பெயரும் | பற்று (பிரிவு) | தவறணை திறக்கப்பட வேண்டிய பிரதேசம் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இலக்கம் 02 குருநாகல் | வேஉடவில்லி ஹறத்பத்துவ | நகரப் பிரிவு இல. 1, 9, 10, 11, 12 | 3,000 ரூபா | 2019.09.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

7-950

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : சிரீ அக்ரி இன்டர்நெஷனல் வென்ச்சர் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 00212289
பதிவு முகவரி : இல. 303, 2/1, K.B.கிறிஸ்ரி பெரேரா மாவத்தை, கொழும்பு 13.
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.03

கம்பனிச் செயலாளர்கள்.

7-726

---

## வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சீ. டபிள்யூ. இமெஜ்லெக்டரி (பிவீடி) எல்டிடீ
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 129940
பதிவு முகவரி : இல. 21/1, எலியட் வீதி, காலி.
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.02.19

கம்பனிச் செயலாளர்கள்.

7-727

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : எஸ். எச். ஃபுட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்
கம்பனி இலக்கம் : பீவீ 00212821
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.06.21
பதிவு முகவரி : இல. 291/32A, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 6

எல். எம். மெனேஜ்மன்ட் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 291/32A,
ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 5.

7- 738

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : லீப் டிஜிட்டல் (பிறைவட்) லிமிடட்
கம்பனி இலக்கம் : பீவீ 00212836
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.06.21
பதிவு முகவரி : இல. 163/15, நாவல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5

எல். எம். மெனேஜ்மன்ட் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 291/32A,
ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 5.

7- 739

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ்,வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : கொப்ஸ் பிரீ ஸ்கூல் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 00212921
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.25
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.36, தெஹிவளை ரோட், பெப்பிலியான, பொரலெஸ்கமுவ

கம்பனியின் பெயர் : த ப்ளிஸ்பரி (பீவீஎ) எல்டீ
கம்பனியின் இல. : பீவீ 00213113
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.29
பதிவு செய்யப்பட்ட முகவரி : 109/5, கனேகொட, தொம்பே

கம்பனிச் செயலாளர்.

7-756

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழாக ஜே. டபிள்யூ. கே. என்ரபிறைசஸ் (பிறைவேட்) லிமிடெட் என்ற அதன் பெயரை ஜே.கே. வெடிங் கலெக்ஷன் (பிறைவேட் ) லிமிடெட் என 2019ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி பெயர்மாற்றஞ் செய்துள்ளோம்.-

கம்பனியின் புதியபெயர் : ஜே.கே. வெடிங் கலெக்ஷன் (பிறைவேட் ) லிமிடெட்
பதிவிலக்கம் : பீவீ 93529
முகவரி : இல.38, கோல்ஃபேஸ் கோட் 2, கொழும்பு 03

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கிணங்க,

மேயிடாஸ் செக்கரேறியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட்,

2019, யூலை.

7-797

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பின்வரும் கம்பனி 2019.04.09 ஆந் திகதி கூட்டிணைக் கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : சேப்கார்ட் செக்கியூரிட்டி என்ட் இன்வெஸ்ட்டிகேஷன் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீ வீ 00210891
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 42, அவிசாவளை வீதி, வெள்ளம்பிட்டிய

முஹம்மட் ஜிப்ரி பாத்திமா சுமையா,
கம்பனிச் செயலாளர்.

7-802

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : புளூஸ்கை பவர் (பீவீஎ) எல்டீ
கம்பனி இல. : பீவீ 00212627
பதிவு முகவரி : இல. 334, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.06.15

கோர்ப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ்( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-809

---

## எஸட் கொன்ஸோர்ட்டியம் ( தனியார்) நிறுவனம் (முடிவுக்குக் கொண்டுவருவதன் கீழ் ) பங்குகளால் மட்டுப்படுத்தப்பட்ட கம்பனி - கம்பனி இல. பீவீ 5775 இறுதிக் கூட்டத்துக்கான அறிவித்தல்

உறுப்பினர்களின் தன்னிச்சையான முடிவுறுத்தல்

எஸட் கொன்ஸோர்ட்டியம் (தனியார்) நிறுவனம் (பீவீ 5775) (முடிவுக்கு கொண்டு வருவதன்கீழ்) உறுப்பினர்களுக்கான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவின் கீழ் கணக்குகளை முடிவுக்கு கொண்டு வருவதை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலக்கம் 34, வோட் பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரியில் நடைபெற இருக்கும் இறுதிக் கூட்டத்துக்கான அறிவித்தல் இத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

உதித்த பிரியங்க எகலஹேவ,
முடிவுறுத்தல் செய்பவர்.

288, இராஜகிரிய வீதி,
இராஜகிரிய.

7- 817

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஷஸ்சீக்கொ ஹைடெக் சொலூஷன்ஸ் (பீவீடி) எல்டிடீ
பதிவிலக்கம் : பீவீ 00213157
பதிவு முகவரி : இல.385/3ஏ, எக்ஸத் மாவத்தை, சியம்பலாப்பே

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கென்ஸ் செக்ரட்டரீஸ் (பிறைவட்) லிமிட்டட்.

7-848

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஓ நெச்சுரல் ஃபுட் புரொடக்ட்ஸ் (பீவீடி) எல்டிடீ
பதிவிலக்கம் : பீவீ 00213051
பதிவு முகவரி : இல.188/2, வலவ்வத்த, இஹலகொட்டுவெல்ல, பன்னல

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கென்ஸ் செக்ரட்டரீஸ் (பிறைவட்) லிமிட்டட்.

7-849

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஜேசிலோ ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 00212805
கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.06.21
பதிவு முகவரி: இல. 68, ரனசூர மாவத்தை, வென்னவத்தை, வெல்லம்பிட்டி, 10600

(திருமதி ) ஆர் . கே. ஜயவீர,
கம்பனிச் செயலாளர்.

7-858

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : இமர்சீ ஃபிஷிங் அட்வென்ச்சர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 00212473
பதிவு முகவரி : இல. 22/1, மார்சல்ஸ் வீதி, கொச்சிக்கடை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.06.09

கோர்ப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-922

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : விஸ்மாஸ் இங்க்ஜெட் (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123446
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 36, யக்கல பாக் ஷொபிங் கம்பிலெக்ஸ், கண்டி வீதி, யக்கல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.06.28

கம்பனிச் செயலாளர்.

7-985

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சூரி ஏஜன்சி (பிறைவட்) லிமிட்டட்
பதவிலக்கம் : பீவீ 99494
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.61-டீ, ஸ்ரீ மஹா விஹார வீதி, களுபோவில, தெஹிவளை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.07.04

கம்பனிச் செயலாளர்.

7-986

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , குறிப்பிட்ட பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் .-

கம்பனியின் பெயர் : ரோயல்வே இன்வெஸ்ட்மென்ட் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00208179

இணைக்கப்பட்ட திகதி : 2019.01.28
பதிவு முகவரி : அரலிய உயன, தெபானம ,பன்னிப்பிட்டிய

கம்பனிச் செயலாளர்.

7-1002

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாகொளை, மாகொளை இடது, பமுணுவில வீதி, இல. 31/2 முக வரியில் வசிக்கும் முதலிகே கித்சிறி குணவர்தன (தே.அ.அ.இல. 581972695V) ஆகிய என்னுடைய அற்றோணித்தத்துவகாரார் ஆக ராஜகிரிய , கலபலுவாவ, 1 ஆம் வீதி, இல. 220/10B இல் வசிக்கும் சந்தன பிரதீப் ரணதுங்கவை (தே.அ.அ.இல. 702570417V) நியமித்து பிரசித்த நொத்தாரிசு திரு. ஏ. சமரப்புலிகே என்பவரால் 2014, ஒகத்து 26 ஆந் திகதி எழுதி நிச்சயப்படுத்தப்பட்ட பத்தரமுல்லை, பதிவாளர் நாயகத் திணைக்கள அதிகாரி அற்றோணித் தத்துவப் புத்தகத்தில் 8586 பகுதி 91 ஆம் இலக்க பிரித்தேடு 124 ஆம் நாட் குறிப்பேடு இலக்கம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட இலக்கம் 1877 ஆம் இலக்க அற்றோணி அனுமதிப்பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த அற்றோணி அனுமதிப்பத்திரம் மூலம் எந்த விதமான இரத்துச் செய்யும் நடவடிக்கைகளும் இல்லை என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு அறியத்தருகிறேன்.

முதலிகே கித்சிறி குணவர்தன.

7- 728

---

## விஷேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுப் பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுவதாவது, எத்னாவல இலக்கம் பீ 108 இல் வதியும் (1) மிகெல் ஆரச்சிலாகே பிரேம ஜயந்த (தே.அ.அ.இல. 743452879V) மற்றும் (2) பாதுக்க போப்பே இலக்கம் 83 இல் வதியும் திஸாநாயக்க முதியன்சேலாகே டெனிஸ் மெத்சிறி திஸாநாயக்க ( தே.அ.அ.இல. 803063281V) ஆகிய எம்மால் பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ. டி. அயோமி ரத்நாயக்காவினால் 2018, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி மற்றும் இலக்கம் 10403 , நாட்புத்தக இலக்கம் 17590 மற்றும் 2018.10.03 ஆந் தினத்தின் கீழாக பக்க இலக்கம் 251/116 இல் பதிவு செய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம் ஹோகந்தர,ஹோகந்தர கிழக்கு, இலக்கம் 83/3/3 இல் வதியும் குலசிங்ஹ வத்சல வீரசூரிய (தே.அ.அ.இல. 197323500462) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டது என்பதாகும். மேற்படி அற்றோணித் தத்துவதாரரினால் இது முதற்கொண்டு எமது அற்றோணி உரித்தாளராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக இருக்கமாட்டோம்.

(1) மிகெல் ஆரச்சிலாகே பிரேம ஜயந்த,
(2) திஸாநாயக்க முதியன்சேலாகே
டெனிஸ் மெத்சிறி திஸாநாயக்க.

7- 750

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுவரெலியா மாவட்டம், ஹல்க்ரன் ஓயா, ராகலை பஸார் , இல. 108 எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 840723135V ஐ உடைய ஜெயகுமார் சுதர்சன் என்றறியப்படும் ஜெயகுமாரின் புதல்வன் சுதர்சன் ஆகிய நான், நுவரெலியா மாவட்டம், ஹல்க்ரன் ஓயா, ராகலை பஸார், இல. 108 இல் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இல. 681390510V ஐ உடைய சொக்கலிங்கம் கணேஷராஜா அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு எஸ். தாயுமானவன் அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2010.07.20 ஆந் திகதி மற்றும் 15870 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவத்தினை இத்தால் இரத்துச் செய்கின்றேன் எனவும் அவ் அற்றோணித் தத்துவக்காரரின் இதன் பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜெயகுமார் சுதர்சன் என்றறியப்படும்
ஜெயகுமாரின் புதல்வன் சுதர்சன்

7- 788

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாணம்,கண்டி மாவட்டம், கண்டி, அஸ்கிரிய ,தொடம்வல ஒழுங்கை, இல. 32 எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 761990497V உடைய கிராம்பே வத்தே கெதர நிலந்த குமார விஜேரத்ன ஆகிய நான், கண்டி, பேராதெனிய , சுபோதாராம வீதி, இல. 426 A இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 716430138V உடைய சுதந்தி புஸ்ஸேபிடிய அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு டி. எம். எஸ். திசாநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.06.26 ஆந் திகதி மற்றும் 1996 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தினை 2019, யூலை 08 ஆந் திகதியான இன்று முதல் இத்தால் இரத்துச் செய்கின்றேன் எனவும் அவ் அற்றோணி தத்துவக்காரரின் இதன்பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

கிராம்பே வத்தே கெதர நிலந்த குமார விஜேரத்ன.

7-829

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

